**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்.**
**முன்னிலை :- திரு.S.அன்புதாசன், பி,காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்.**
**2025ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12ம் நாள் வெள்ளிக்கிழமை**
**IA.No.4/2025 in IA.No.3/2025 in OS.No.62/2020**

1. I. சாகுல் ஹமீது
2. E.மீரான் முகைதீன் சலீம்
3. I. அபுபக்கர்
4. N. நைனார் முகமது
5. A. கன்சுல் பாத்திமா .... மனுதாரர்கள்/7,8 & 13 to 15ம் பிரதிவாதிகள்

/எதிர்/

P.முத்து .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்னர் இன்று(12.12.2025) இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள்/7,8 & 13, 14, 15ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள். A.முகமது ரியாஸ், M.ரசிதா, S. பானு மஞ்சுளா, P. பிரியதர்ஷினி ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் அழைத்தும் ஆஜராகததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும்:

**<u>உ த் த ர வு</u>**

கடந்த 17.10.2025ம் தேதியில் மனுதாரர்கள்/7,8 & 13 to 15ம் பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து

செய்யக்கோரி உவிமுச கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151–ன்கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்கள்/7,8 & 13 to 15ம் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தின் மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u> :–**

மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் ஆவார்கள். மேற்படி மனுவில் மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்ய கடந்த 17.10.2025–ம் தேதி வாய்தா ஏற்ப்பட்டிருந்தது. அன்றைய தினம் வழக்கு கட்டு வேறு கட்டுகளுடன் கலந்துவிட்டபடியால் கவுண்டர் தயார் செய்ய இயலவில்லை. மனுதாரர்களின் ஆஜரின்மை காரணமாக, மனுதாரர்களுக்கு எதிராக exparty உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்துடன் மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகையால், கடந்த 17.10.2025ம் தேதியில் மனுதாரர்களுக்கெதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்திரவை மேற்படி காரணங்களினால் ரத்து செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளனர்.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5) **<u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>**

மனுதாரர்களின் மனு மற்றும் வழக்குக் கோப்பினைப் பரிசீலனை செய்ததில்,

மனுதாரர்களுக்கு வாய்தா போடப்பட்டிருந்த 17.10.2025 அன்று, வழக்கு கட்டு வேறு கட்டுகளுடன் கலந்துவிட்டபடியால் எதிருரை தாக்கல் செய்ய காலதாமதம் ஆகிவிட்ட காரணத்தினால் தாவா மனு ஒருதலைபட்சப்படுத்தப்பட்டு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது . மேலும் எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்ட நிலையில், மனுதாரர்கள் எதிருரையை தாக்கல் செய்துவிட்டதாலும் இவ்வழக்கின் இறுதியான தீர்வுக்கு தரப்பினர்களுக்கு போதிய வாய்ப்பளிக்க வேண்டும் என்பதை கருத்திற்க்கொண்டு, மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 17.10.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மேற்படியாரின் மனுவை அனுமதிப்பது தான் நீதியின் பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவில்,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டு, 2025 ம் நாளன்று டிசம்பர் திங்கள் 12–ம் நாளாகிய இன்று திறந்த அவையில் அவையறியப் பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2025.12.12 16:24:20 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்**
**ஆத்தூர்**